# நிகவெரட்டிய பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 19 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ் அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்த நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பௌதீக திட்டமிடல், பாதைகள், காணி மற்றும் கட்டடங்கள் திட்டத்தின் மீளாய்வாண்டிற்காக மூலதன உதவி ரூபா 17,794,000 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 30,832,330 தொகை என ரூபா 13,038,330 மிகையாக எடுக்கப்பட்டிருந்தது. அத்துடன், மூலதன செலவு ரூபா 28,592,318 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 21,624,497 தொகை என ரூபா 6,967,821 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 17,328,846 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 40,722,076 இனால் என ரூபா 23,393,230 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதி ரூபா 23,599,090 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 33,289,868 என ரூபா 9,690,778 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 7,590,160 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 7,721,088 தொகை என ரூபா 130,928 மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதிய நிதி பங்களிப்பு மீதி ரூபா 3,456,151 தொகை எனினும் அவை நிதிக் கூற்றுக்ளில் ரூபா 3,364,659 என ரூபா 91,492 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 3,758,708 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 3,480,963 என ரூபா 277,745 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆண்டளவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த சுகாதார நிலையத்தின் நிர்மாண வேலை கிரயம் ரூபா 61,099,770 எனினும் அவற்றில் ரூபா 20,772,908 மாத்திரம் மூலதனப்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கட்டட பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கு மீதி ரூபா 40,326,862 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2010 ஆண்டின் போது ரூபா 2,487,516 தொகை ஒன்று செலவிடப்பட்டு பிலிசரு செயற்திட்ட கட்டடத்தின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) 2009 மற்றும் 2012 ஆண்டுகளின் போது முற்கொடுப்பனவு அடிப்படையில் கேள்வி கோரப்பட்ட கடைகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 14,582,717 இற்கான தொகையினை கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஒ) 1992 மற்றும் 2008 ஆண்டுகளின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 745,000 கிரயத்தை உடைய 49–0067 இலக்கம் கொண்ட டிரக்டர் வண்டி மற்றும் ரூபா 1,020,000 கிரயத்தையுடைய இலக்கம் NW RB 0942 கொண்ட டிரக்டர் வண்டியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஓ) 2012 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கில் ரூபா 22,770,888 ஆகக் காணப்பட்ட செலவு மீதி மீளாய்வாண்டு ஆரம்பத்தில் பேரேட்டு கணக்குகளுக்கு ரூபா 7,388,386 இற்கான வரவு மீதி என எடுக்கப்பட்டிருந்தது.

(ஔ) 2012 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு ரூபா 46,726,416 இற்கான செலவு மீதி மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு பேரேட்டு கணக்குகளுக்கு ரூபா 74,258,318 தொகை என எடுக்கப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பெறுவனவுகள் மற்றும் இறுதி மீதியின் கீழ் 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் பிரகாரம் நேரொத்த பெறுமதியிடையே ரூபா 3,514,028 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

1.3.3 எதிர்பாராத பொறுப்புக்கள்

-------------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஊழியர்களுக்காக உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகையினை முறைப்படி செலுத்தாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்த நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த மீதி ரூபா 3,756,151 ஆகும்.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 56,994,826 ஆக காணப்பட்டதுடன் இது தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்பிக்கப்படவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 46,150,420 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 46,111,246 இற்காக காலப்பகுப்பாய்வு சமர்பிக்கபட்டிருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 155,304,760 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,170,998 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,171,961 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 10,342,959 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 32,217,281 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 25,822,686 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போதும் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 15,565,593 வரை அதிகரித்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 50,971,567 இல் நூற்றிற்கு 66 ஆகிய ரூபா 33,796,962 உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரை கட்டணம், சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 32,217,280 இன் நூற்றிற்கு 55 என ரூபா 17,794,000 தொகை ஒன்று கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைத்த பணத்தினை அடங்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 41,800,569 இல் நுற்றிற்கு 56 ஆகிய ரூபா 23,323,459 இற்கான தனிப்பட்ட சம்பள செலவுக்காக செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் நூற்றிற்கு 77 ஆக ரூபா 17,886,251 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளுராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 25,822,686 இல் நூற்றிற்கு 42 ஆகிய ரூபா 10,793,318 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதியின் நூற்றிற்கு 58 ஆகிய ரூபா 15,029,368 தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

------------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், கடை வாடகை, குத்தகை ஆகிய வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகள் விதித்தில்லாத போதிலும் சபையின் வருமானத்தை சேகரிப்பாளர்களினால் ஆண்டு பூராகவும் அவ்வாறான வருமானம் வெளிக் களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

------------

நிக்கவெரிட்டிய கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான வருடாந்தம் சுமார் ரூபா 51,356 பில் பண்ணப்படும் 30 ஆதனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 51,356 இற்கான நிலுவை ஒன்றும், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான வருடாந்தம் சுமார் ரூபா 28,608 பில் போடப்படும் 9 ஆதனங்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 169,958 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

2.3.3 வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 150(1) மற்றும் 152(1) பிரகாரம் கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு சபையின் செயலாளருக்கு சமர்பித்திருந்த போதும், சபையினால் விதிக்கப்பட்ட வரியை 7 நாட்களில் செலுத்துமாறு பி.ச. 26 படிவத்தின் படி குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவித்திருக்கவில்லை.

2.3.4 கடை வாடகை

------------------------

(அ) பஸ் நிலைய கீழ் மாடியில் 18 கடைகள் மற்றும் மேல் மாடியில் 12 கடைகள் முன் கொடுப்பனவு அடிப்படையில் 2009 ஜுன் மாதத்தில் கேள்வி கோரப்பட்டிருந்தது குறைந்த விலை கூறல் கூட்டுத்தொகை ரூபா 4,200,000 இற்காக மேல்மாடியில் 12 கடைகள் மற்றும் குறைந்த விலை கூறல் அடிப்படையில் 711,000 தரை மாடியில் 05 இலக்க கடைக்காக கேள்வி சமர்பித்திருக்கவில்லை. கடைகள் கேள்வி கோருவது

தொடர்பாக கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையில் நூற்றிற்கு 40 தொகையின் குறிப்பிட்ட கடிதம் கிடைத்து 21 நாட்களில் செலுத்தி முடிவாக்க வேண்டும். அத்துடன் மீதியாகவுள்ள நூற்றிற்கு 60 தொகையை 05 மாதங்களில் செலுத்தி முடிவாக்குவதற்கு வேண்டும் எனினும் தரை மாடியில் 17 கடைகளில் 4 கடைகளின் கேள்வித் தொகையின் கூட்டுத்தொகையாகிய ரூபா 2,635,100 இற்கான மொத்த தொகையும் 11 கடைகளில் கேள்வித் தொகையின் கூட்டுத்தொகையாகிய ரூபா 5,784,500 தொகையில் ரூபா 2,221,298 உம் 2013 திசெம்பர் வரை நிலுவையாக காணப்பட்டது. மீண்டும் 2012 ஜூலை மாதத்தில் மேல் மாடியில் 12 கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தது. அத்துடன் குறிப்பிட்ட கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் அங்கீகரித்த கேள்வித் தொகையில் நூற்றிற்கு 50 குறிப்பிட்ட கடிதம் கிடைத்து 21 நாட்களில் மற்றும் மீதியான நூற்றிற்கு 50 தொகையை 90 நாட்களில் ஒரே தடவையில் அல்லது பகுதிகளாக செலுத்தப்பட வேண்டும் எனினும் ரூபா 820,500 இற்கு கேள்வி வழங்கப்பட்ட A 1-1 இலக்கக் கடையில் இருந்து பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மேலும் 8 கடைகளின் மொத்தக் கேள்வித் தொகை ரூபா 4,341,000 தொகையில் ரூபா 2,420,760 தொகை 2013 திசெம்பர் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிணி ஆய்வு நிலைய கட்டடத்தில் மேல் மாடியில் மற்றும் தரை மாடியில் 22 கடைகள் 2012 செப்டம்பர் மாதம் குறைந்த விலை கூறல் கூட்டுத்தொகை ரூபா 24,340,000 இற்கான ஒரே தடவையில் செலுத்தும் பணம் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் கேள்வி கோரப்பட்டிருந்தது. இவற்றின் குறைந்த விலை கூறல் கூட்டுத்தொகை ரூபா 3,990,000 இற்காக 5 கடைகள் மாத்திரம் ரூபா 4,013,500 தொகைக்கு கேள்வி சமர்பிக்கப்பட்டிருந்த போதும் 2013 நவம்பர் மாதம் வரை பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மீண்டும் ஒருமுறை 2013 மே மாதத்தில் குறைந்த விலை கூறல் கூட்டுத்தொகை ரூபா 15,750,000 இற்கு தரைமாடியில் 21 கடைகளும் குறைந்த விலை கூறல் கூட்டுத்தொகை ரூபா 3,600,000 இற்காக மேல் மாடியில் 4 கடைகளும் டென்டர் பண்ணப்பட்டிருந்தன. அவற்றில் குறைந்த விலைகூறல் கூட்டுத்தொகை ரூபா 6,970,000 இற்காக 9 கடைகள் மற்றும் ரூபா 7,045,000 தொகைக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது எனினும் ரூபா 750,500 இற்கு கேள்வி வழங்கப்பட்டியிருந்த தரை மாடியில் 10 ஆம் இலக்க கடையில் இருந்து பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மேலும் 8 கடைகளில் இருந்து ரூபா 4,048,750 தொகையொன்று 2013 திசெம்பர் வரை நிலுவையாக காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

சபையினால் சபைக்குச் சொந்தமான ஆதனங்களை இனங்கண்டு அவற்றின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படாமல் வெளி தரப்பினருக்கு அவற்றில் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. சபைக்குச் சொந்தமான பழுகஸ் சந்தியில் காணி உறுதி இலக்கம் சீ.59 காணிப் பகுதியில் 2009 ஆண்டின் போது வெளி தரப்பினர் ஒருவரினால் ஒரு மில்லியன் ரூபா செலவிடப்பட்டு அங்கீகாரம் இன்றி பால் விற்பனவு நிலையம் ஒன்றும் உற்பத்தி நிலையம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. சபையினால் அவ் விடத்திற்கு மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் பெற்றுக் கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

3.2 செயற்திட்டங்களை அமுல் நடத்துதல்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆண்டின் போது ரூபா 15,321,032 கிரயத்தில் வேலைகள் பூர்த்தி செய்திருந்த 30 கடைகளை கொண்ட பஸ் நிலைய கட்டடத்திற்கு 2013 திசெம்பர் மாதம் வரை நீர் மற்றும் மின்சார வசதிகள் பெறபட்டு வியாபார நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் 2011 திசெம்பர் மாதம் அளவில் ரூபா 61,099,770 செலவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பிணி ஆய்வு நிலையக் கட்டடத்திற்கு 2013 திசெம்பர் வரை நீர் மற்றும் மின்சாரம் பெறப்பட்டு திறக்கப்பட்டிருக்கவில்லை எனினும் இந் நிலையம் நிர்மாணிப்பதற்காக பெறப்பட்டிருந்த கடன் தொடர்பாக தவணைப் பணம் மற்றும் வட்டி ஆக 2012 ஆண்டின் போது ரூபா 3,798,750 தொகையும் 2013 ஆண்டின் போது ரூபா 3,164,584 தொகையும் செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. மின்சாரம் பெறுவதற்காக ரூபா 2,500,000 தொகை ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அதற்கான ஏற்பாடுகள் காணப்படவில்லை. அத்துடன் கட்டடத்தின் மின்சார முறையை அமைக்கும் போது ஒவ்வொரு கடைக்கும் வெவ்வேறாக மின்மானிகள் பொருத்தக் கூடிய விதமாக மின்சாரம் பொறுத்தப்பட்டிருக்கவில்லை.

3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-----------------------------------------------------------------------

ரூபா 3,449,380 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பிலிஸரு செயற்திட்ட விடயங்கள் 2012 ஆண்டளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் பெறுவதில் தாமதம் காரணமாக குறிப்பிட்ட செயற்திட்டத்தில் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. தற்போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரமாகும் குப்பைகளை திம்பிரியாவ இல் அமைந்துள்ள சுமார் 10 ஏக்கர் தரைப் பகுதி குழி முறையில் போடப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) செயற்திட்டங்களை அமுல் நடத்துதல்